# தௌத்தியம்.



## *பண்-கொல்லி.*

அரஹர மந்திர வமல நிரந்தர
சரவண சம்பிரம சங்கர புத்திர
சுரபதி பூம சுகோதய போதக
பரிபுர சததள பாத நமஸ்தே. 1

ஆதி யனாதியு மான வரோதய
சோதி நிலாவு சடானன சுபகர
வேதக சமரச விண்டலர் பண்டித
பாதக கண்டன பாத நமஸ்தே. 2

இந்துள லம்பக விங்கித மங்கல
சுந்தரரூப துவாதச கரதல
சந்திர சேகர தடதா கிடதடப்
பந்திகொ ணிர்த்தன பாத நமஸ்தே. 3

**ஈ**சுர நந்தன வீசுர புங்கவ
தேசுறு குண்டல சித்திர பந்தன
ஆசறு சஸ்திர ஹஸ்த சரோருக
பாச விமோசன பாத நமஸ்தே. 4

**உ**ச்சித மஞ்ஞையி லூரதி மோகன
நிச்சய வுத்தர நித்ய மனோலய
சற்சனர் மித்திர சத்துரு கண்டன
பச்சையம் புஷ்கர பாத நமஸ்தே. 5

**ஊ**ர்த்துவ நாடகர்க் கோதிய தேசிக
ஆர்த்த தயித்திய ரடறெறு காதக
கூர்த்திகை வீரிய குக்குட கேதன
பார்க்க வருங்குக பாத நமஸ்தே. 6

**எ**ண்ணறு வைபவ விந்த்ர விசேஷண
புண்ணிய வுத்தம பூரண பச்சிமக்
கண்ணில குஞ்சிவ கந்தகிரு பாசன
பண்ணவர் பூஜித பாத நமஸ்தே. 7

**ஏ**ரக நாயக வென்குரு நாயக
தாரக நாயக சண்முக நாயக
காரக நாயக கதிதரு நாயக
பாரக நாயக பாத நமஸ்தே. 8

**ஐ**ங்கர சோதர வம்பிகை காதல
மங்கள வல்லி மனோரத குஞ்சரி
இங்கித காவல விகபர சாதக
பங்கயன் மால்பணி பாத நமஸ்தே. 9

---

***4. பந்தனம்*** = *அரைஞாண்.*

***5. பச்சையம் புஷ்கர பாதம்*** = *அன்றலர்ந்த அழகிய தாமரை மலரொத்த அடி.*

***6. கூர்த்திகை*** = *ஆயுதம் ;* ***சே - திவாகரம்*** *காண்க.*

ஔகர மஹாரத வொளிர்புய வமுதர்கள்
புகழுப வீதவி பூதிகொண் முண்டக
ரகித விதூன லலாட விலோசன
பககுஹ பாவக பாத நமஸ்தே. 10

ஓமர ஹரசிவ வோஞ்சர வணபவ
ரீமர ஹரசிவ நிகழ்பரி புரபவ
ஸ்ரீமர ஹரசிவ திரள்பவ மொழிவளர்
பாமகள் புகழருட் பாத நமஸ்தே. 11

கலியுகம் 4994 நந்தன (கி.பி.1892) வருடம் மார்கழி மாதம் 24ஆம் தேதி
சுக்கிரவாரம்

பாம்பன் சீடர்களுள் கல்வியறிவுடையவராயும் உத்தியோகத்தி லிருப்பவராயுமிருந்த L.D. முத்துக்கருப்ப பிள்ளை, முதன்மண்டலத்திலுள்ள நவரத்தின மீக்கூற்று முதலிய குழிப்புடைச் சந்தப் பாட்டுக்களைப் பார்த்துவிட்டு இவ்விதமாகப் பாடுவதாயின் அவை, எளிதாக யாவரும் பாடவும் பொருளறியவும் இயையாதனவாமே, திருஞானசம்பந்தர் முதலியோர் பாடிய பாட்டுக்களைப் போலக் குமாரபிரான் மீதும் பாடுவதாயின் அவை, என்போல்வார் பலருக்கும் பயன்படுவனவாமே என்றுரைத்ததை அங்கீகரித்த வாறாகவே ஆசிரியர் இம்முதற் கண்டத்தைப் பாடத் தொடங்கினர் என்க.